**இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ("பல்கலைக்கழகம்") 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பல்கலைக்கழகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு பல்கலைக்கழகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பல்கலைக்கழகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- பல்கலைக்கழகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- பல்கலைக்கழகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 1 இன் 99 ஆம் பந்தியின் பிரகாரம் அனைத்து வருமானங்களும் மிகை அல்லது பற்றாக்குறையில் | கட்டுப்படுத்தப்பட்ட நோக்கங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளதால், நிதிக்கூற்றுக்களில் | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளடக்கப்பட வேண்டும், ஆனால் மீளாய்வாண்டின் போது ஈட்டிய ரூபா 24,700,208 குறுங்கால முதலீட்டிலிருந்தான வட்டி வருமானமானது வருமானமாக இனங்காணப்படாமல் கட்டுப்படுத்தப்பட்ட நிதியத்திற்கு (restricted fund) செலவு வைக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட நிதியம் என்பன நிதிக்கூற்றுக்களில் அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன. | வருமானமாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | இணங்குதல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 50 ஆம் பந்தியின் பிரகாரம் ஒரு நிறுவனத்தின் செயற்பாடுகளில் ஒத்த தன்மை அல்லது செயற்பாடுகளிலான சொத்துக்கள் தொகுக்கப்படாமல் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் ரூபா 105,634,056 கிரயமான ஏனைய சொத்துக்களாக காட்டப்பட்டுள்ளது. | 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சரியான சொத்து வகைப்படுத்தல்களின் கீழ் இச் சொத்துக்கள் தொகுக்கப்பட வேண்டும். | -மேற்படி- |
| (இ) | நிலையான சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. ரூபா 609,026,512 கிரயமான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியளவில் இன்னும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகாரம் மேற்படி மதிப்பிடப்பட்ட தவறை சீர்செய்வதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நியமத்தின் பிரகாரம் சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (ஈ) | 1986 முதல் 2017 வரையிலான காலப்பகுதியில் திறைசேரியிடமிருந்து நடைமுறையல்லாத சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காக பெறப்பட்ட மூலதன மானியங்கள் காலக்கழிவிடப்பட்டிருக்கவில்லை. மேலும், 2018 முதல் 2021 வரையான காலப்பகுதியில் திறைசேரியிடமிருந்து நடைமுறையல்லாத சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காக பெறப்பட்ட ரூபா 1,087,500,000 மூலதன | மானியங்கள் ஆளுகை அதிகாரசபையின் ஒப்புதலுடன் காலக்கழிவிடப்படும். | -மேற்படி- |

மானியங்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 11 இன் பிரகாரம் வருமானமாக இனங்காணப்பட்டிருக்கவில்லை.

### 1.5.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விளையாட்டுப் பொருட்களின் பெறுமானத்தேய்வுக் கொள்கை இனங் காணப்பட்டிருக்காததுடன் பல்கலைக்கழகத்தின் பிரதான நிலையம் மற்றும் திருகோணமலை வளாகத்தில் உள்ள விளையாட்டுப் பொருட்கள் முறையே 10 சதவீதமும், 20 சதவீதமும் பெறுமானத்தேய்விடப்பட்டுள்ளன. ஆகையால் ரூபா 16,159,548 தொகையான விளையாட்டுப் பொருட்களின் திரண்ட பெறுமானத்தேய்வின் சரியான தன்மையை திருப்திகரமாக சரிபார்க்க முடியவில்லை. | விளையாட்டுப் பொருட்களுக்கான 25 சதவீத பெறுமானத்தேய்வு விகிதம் 2022 இன் இறுதிக் கணக்கில் பயன்படுத்தப்படும். | விளையாட்டுப் பொருட்களுக்கு ஒரு பெறுமானத்தேய்வு விகிதம் பயன்படுத்தப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) பல்கலைக்கழகத்தின் 15 இடங்களில் உள்ள ஏறத்தாழ 241.2 ஹெக்டெயர் காணி மதிப்பிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | காணியின் உரிமைத்துவத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | காணியின் பெறுமதி கணக்குகளிற்கு கொண்டு வரப்பட வேண்டும். |
| (ஆ) 2019 முதல் 2021 வரையிலான காலப்பகுதியில் உயர்கல்வி விரிவாக்கல் மற்றும் அபிவிருத்தியை துரிதப்படுத்துதல் செயற்திட்டத்தால் ரூபா 23,055,912 கிரயமான நடைமுறையல்லாத சொத்துக்களின் 275 உருப்படிகள் பல்கலைக்கழகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த செயற்திட்டத்தால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலின் பிரகாரம் அந்த சொத்துக்களின் பெறுமதி கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | பெறுமானத்தேய்விற்கான தொடர்புடைய முன்னைய ஆண்டு சீராக்கத்துடன் இந்த சொத்துக்களின் பெறுமதி 2022 ஆம் ஆண்டிற்கான கணக்குகளுக்கு கொண்டு வரப்படும். | சொத்துக்களின் பெறுமதி கணக்குகளுக்கு கொண்டு வரப்பட வேண்டும். |
| (இ) 2008 இல் ரூபா 3,666,316 கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட நோயியல் ஆய்வுகூடம் 2021 திசெம்பர் 31 அளவில் ரூபா 2,566,312 இற்கு பதிலாக ரூபா | 2022 ஆம் ஆண்டுக்கான இறுதிக் கணக்குகளில் இது சீர்செய்யப்படும். | திரண்ட பெறுமானத்தேய்வை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | 280,116 ஆல் பெறுமானத்தேய்விடப்பட்டிருந்தது. இதன் விளைவாக, திரண்ட பெறுமானத்தேய்வு நிதிக்கூற்றுக்களில் ரூபா 2,286,196 ஆல் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | | வேண்டும். |
| (ஈ) | தற்போது பல்கலைக்கழகத்தில் சேவையாற்றுகின்ற 09 விரிவுரையாளர்களிடம் இருந்து பெறப்பட வேண்டிய ரூபா 34,042,950 கூட்டுத்தொகையான பிணைமுறி மீறல்கள் பெறவேண்டியவையாக கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, நடைமுறை சொத்துக்கள் மற்றும் பிணைமுறி பொறுப்பு ஒதுக்கம் என்பன நிதிக்கூற்றுக்களில் அதே தொகையால் குறைத்தக் காட்டப்பட்டிருந்தன. | பொருத்தமான கணக்கீட்டு செயன்முறையை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பிணைமுறி மீறல்களின் பெறுமதி கணக்குகளுக்கு கொண்டு வரப்பட வேண்டும். |
| (உ) | ஆங்கில மொழி கற்பித்தல் பிரிவுக்கான மூன்று மாடி கட்டிடத் தொகுதி ரூபா 224,269,514 கிரயத்தில் பூர்த்தி செய்யப்பட்டு 2020 ஆகஸ்ட் 27 இல் கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அது மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை என்பன முறையே ரூபா 14,913,923 மற்றும் ரூபா 11,213,476 ஆல் குறைத்துக் காட்டப்பட்டுள்ளன. | சொத்துக்களை மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களை மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான ஆவணச்சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 3,925,059 கூட்டுத்தொகையான வங்கிக் கணக்கொன்றில் உள்ள நேரடி வரவு 12 ஆண்டுகளாக இனங்காணப்படாமல் வங்கி கணக்கிணக்கத்தின் போது இனங்காணப்படாத வரவுகளாகக் காட்டப்பட்டுள்ளது. மேலும், 02 வங்கிக் கணக்குகளில் உள்ள ரூபா 1,604,146 கூட்டுத்தொகையான வைப்புக்கள் 11 ஆண்டுகளுக்கும் மேலாக வங்கிக் கூற்றில் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் எல்லைகளுக்குள் மீதிகளை பதிவழிப்பதற்கு அங்கீகாரம் பெறப்படும். | அம் மீதிகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

தேறாத வைப்புக்களாக காட்டப்பட்டிருந்தன. தேறாததற்கான காரணங்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டியவைகள்**

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 423,554,640 மொத்த பெறவேண்டிய மீதிகளின் 58 சதவீதத்தற்கு சமமான ரூபா 245,496,675 தொகை 03 முதல் 39 ஆண்டுகள் வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | தற்போதுள்ள விதிகள் மற்றும் பிரமாணங்களின் பிரகாரம் கிடைக்கக்கூடிய தகவல்களின் அடிப்படையில் தீர்ப்பனவு செய்யப்படாத முற்பணங்களை அறவீடு செய்வதற்கு / பதிவழிப்பதற்கு பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. | பெறவேண்டியவைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) மேற்படி மொத்த பெறவேண்டியவைகளில் ஒப்பந்தங்களை மீறிய 70 விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 151,365,855 பிணைப் பெறுமதி 10 முதல் 39 ஆண்டுகள் வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | பிணைமுறி அறவீடு மற்றும் மீளாய்வுக் குழுவானது பிணைமுறி செலுத்த தவறியவர்களிடமிருந்து கிடைக்கக்கூடிய UPF மீதிகளிலிருந்து பிணைமுறிப் பெறுமதிகளை அறவீடு செய்வதற்கு அவர்களிடம் ஒப்புதலை பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தியது. | விரிவுரையாளர்களிடம் இருந்து பிணைமுறிப் பெறுமதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6.2 செலுத்த வேண்டியவைகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 112,665,300 கூட்டுமொத்தமான செலுத்த வேண்டிய மீதிகளில் ரூபா 15,996,706 மீதிகள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 03 ஆண்டுகளுக்கும் மேலாகத் தீர்க்கப்படாமல் காணப்பட்டன. இது மொத்த செலுத்த வேண்டியவைகளில் 14 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. | எதிர்காலத்தில் உரிய அதிகார சபைகளுக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்த வேண்டியவைகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் பேன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக | 03 முதல் 06 ஆண்டுகள் | குறைப் | பொறுப்பு நிதிப் |

| | | | | |
|---|---|---|---|---|
| | சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 571. | வரையான காலவீச்சில் காணப்பட்ட ரூபா 9,091,397 தொகையான 19 நிறுத்திவைத்தல் பணம் தொடர்பாக தீர்ப்பனவு செய்வதற்கு அல்லது அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காலப்பகுதியின் பின்னர் நிறுத்தி வைத்தல் பணம் செலுத்தப்படும். | பிரமாணம் பின்பற்றப்பட வேண்டும். |
| (ஆ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் தாபன விதிக்கோவை<br>--------------------------------------------- | | | |
| (i) | III ஆம் அத்தியாயத்தின் 20.8 ஆம் உப பிரிவு மற்றும் VI ஆம் அத்தியாயத்தின் 4.1 ஆம் உப பிரிவு மற்றும் 2017 யூலை 10 ஆம் திகதிய 10/2017 ஆம் இலக்கம் | 2020 ஆகஸ்ட் 29 இல் தாவரவியல் துறையின் தரம் I சிரேஷ்ட விரிவுரையாளரின் பதவி விலகலை பேரவை ஏற்றுக்கொண்டிருந்தது. பின்னர் அவ் விரிவுரையாளர் 2020 செப்தெம்பர் 02 முதல் அமுலுக்கு வரும் வகையில் முன்னைய பதவிக்கு மீண்டும் பணிக்கமர்த்தப்பட்டிருந்தார். எனினும், தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளிற்கு முரணாக ஆரம்ப சம்பளமான ரூபா 91,310 இல் வைப்பதற்கு பதிலாக சம்பள படிநிலை ரூபா 119,520 ஆக வைக்கப்பட்டிருந்தது. மேலும் 2020 செப்தெம்பர் 03 முதல் 2021 திசெம்பர் 31 வரையிலான காலப்பகுதியில் ரூபா 1,375,407 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ளது. | XVII ஆம் அத்தியாயத்தின் 2.2 மற்றும் amp; 2.3 ஆம் பிரிவு மற்றும் III ஆம் அத்தியாயத்தின் 20 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் பேரவையால் அதன் 307 ஆவது கூட்டத்தில் அதிகாரம் வழங்கப்பட்டது. | தாபன விதிக் கோவை பின்பற்றப்பட வேண்டும். |
| (ii) | III ஆம் அத்தியாயத்தின் 26.7.2 ஆம் உப பிரிவு | ஏனைய உயர்கல்வி நிறுவனங்கள் அல்லது ஏனைய அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் இருந்து வருகை தரும் விரிவுரையாளர்களை | பிரயோக விஞ்ஞான பீடம் தற்போது வருகைதரும் நியமனங்களிற்காக ஏற்கனவேயுள்ள நடைமுறை | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பணிக்கமர்த்தும் போது பத்திரிகைகளில் வெற்றிடங்கள் விளம்பரப்படுத்தப்பட வேண்டிய போதிலும் உப பிரிவிற்கு முரணாக குறிப்பிட்ட பீடம் அல்லது துறையிலுள்ள தலைவர்கள் அல்லது பீடாதிபதிகளின் கருத்தில் கொள்ளலுடன் மாத்திரம் வருகை தரும் விரிவுரையாளர் பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர். | நெறிமுறைகளை நடைமுறைப்படுத்தத் தொடங்கியுள்ளது. | |
| (iii) | XX ஆம் அத்தியாாயத்தின் 3.1 ஆம் உப பிரிவு மற்றும் 2017 யூலை 10 ஆம் திகதிய 10/2017 ஆம் இலக்க UGC இன் சுற்றறிக்கை கடிதம் | அனைத்து பதவியணியினரும் கைவிரல் அடையாளமிடல் இயந்திரம் மூலம் தமது வருகையை நிரூபிக்க வேண்டிய போதிலும் கல்விசார் பதவியணியினர் அந்தத் தேவைப்பாட்டுடன் இணங்கியிருக்கவில்லை. | கல்விசார் பதவியணியினர் தமது வருகையை பாரம்பரியமாக கைவிரல் அடையாளமிடல் இயந்திரத்தில் பதிவு செய்வதில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட வேண்டும். |
| (iv) | XXVI ஆம் அத்தியாயத்தின் 2.6 ஆம் உப பிரிவு மற்றும் தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சபையின் 2016 திசெம்பர் 22 ஆம் திகதிய 2004/எல்டி/1 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி. | ரூபா 128,861,691 கிரயமான நூலக புத்தகங்கள் மற்றும் பருவ இதழ்கள் தொடர்பான இருப்பு மெய்மையாய்வு ஆரம்பத்திலிருந்து நடாத்தப்பட்டிருக்கவில்லை. | இருப்பு மெய்மையாய்வு நடாத்தப்படும். | சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட வேண்டும். |
| (v) | UGC இன் 2013 ஏப்ரல் 10 ஆம் திகதிய 04/2013 ஆம் இலக்க தாபன சுற்றறிக்கை கடிதத்தின் மூலம் திருத்தப்பட்ட XXVI ஆம் அத்தியாயத்தின் 3 ஆம் பிரிவு | மீளாய்வாண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டு அது தொடர்பான அறிக்கையானது 2022 மார்ச் 17 இல் அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் அத்தகைய அறிக்கை 2022 | கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக இந்த தாமதம் ஏற்பட்டதுடன் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | யூலை 18 வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2020 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கை மற்றும் அது தொடர்பாக பயன்படுத்த முடியாதவற்றை அகற்றுதல் தொடர்பான நடவடிக்கை 2022 யூலை 18 வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | 2014 ஒக்தோபர் 21 ஆம் திகதிய பல்கலைக்கழக சேவை மேன்முறையீட்டு சபையின் கட்டளை மற்றும் பிரதி சொலிசிட்டர் ஜெனரலின் 2014 திசெம்பர் 09 ஆம் திகதிய சீஏ/201/2014/ஈயூஎஸ்எல் ஆம் இலக்க கடிதத்தின் 4 ஆம் பந்தி. | பல்கலைக்கழக சேவை மேல்முறையீட்டுச் சபையின் கட்டளை மற்றும் நீதிமன்றத்தினால் முன்மொழியப்பட்ட கருத்தின் பிரகாரம் 2015 யூன் 24 முதல் அமுலுக்கு வரும் வகையில் பதவி உயர்வு வழங்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் விரிவுரையாளர் ஒருவர் 2011 யூலை 03 முதல் அமுலுக்கு வரும் வகையில் தரம் II சிரேஷ்ட விரிவுரையாளர் தரத்திற்கு பதவி உயர்வு பெற்றுள்ளார். இதன் விளைவாக, 2011 முதல் 2021 வரையிலான காலப்பகுதியில், விரிவுரையாளருக்கு ரூபா 3,208,006 தனிப்பட்ட படிகள் மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ளன. | 2015 திசெம்பர் 21 இல் கூடிய தெரிவுக் குழு 2011 யூலை 03 முதல் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II பதவிக்கான பதவியுயர்வை பரிந்துரைத்தது. | பல்கலைக்கழக சேவை மேன்முறையீட்டு சபையின் கட்டளை பின்பற்றப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 244,038,580 பற்றாக்குறையொன்றாக இருந்ததுடன் ஒப்பிடும் போது அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 291,444,058 ஆக இருந்ததால் நிதி விளைவுகளில் ரூபா 47,405,478 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு எதிராக ஏனைய செயற்பாடுகளிலிருந்தான தேறிய வருமானம் 172 சதவீதத்தால் அதிகரித்தமை மற்றும் முன்னைய ஆண்டிற்கு எதிராக பெறுமானத்தேய்வு மற்றும் காலக்கழிவு தொடர்பான செலினமும் ஏனைய செயற்பாட்டு செலவினங்களும் முறையே 26 சதவீதம் மற்றும் 19 சதவீதத்தால் குறைவடைந்தமை என்பன இம் முன்னேற்றத்திற்கு பிரதானமாக பங்களித்திருந்தன.

### 2.2 முக்கிய செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

மீளாய்வாண்டிற்கான ஆளணி வேதனங்கள் போன்ற பல்கலைக்கழகத்தின் செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 43,828,684 தொகையாலும் 3 சதவீததத்தாலும் அதிகரித்திருந்தது

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஒவ்வொரு நாளின் இறுதியில் REPO வைப்பிலுள்ள பணத்தை வைப்பிலிட்டு மேலதிக வருமானத்தை ஈட்டுதல் ஏனைய பல்கலைக்கழகங்களில் உள்ள வழமையான நடைமுறையொன்றாக காணப்படுகின்ற போதிலும் திருகோணமலை வளாகத்தின் பொறுப்பான அதிகாரிகள் அவ்வாறு செய்திருக்காததுடன் மீளாய்வாண்டின் ஒவ்வொரு நாளின் இறுதியிலும் நடைமுறைக் கணக்கில் ரூபா 50 மில்லியன் முதல் ரூபா 156 மில்லியன் வரையிலான வீச்சில் தொகையொன்று காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | மேலதிக நிதிகளை முதலீடு செய்வதற்கு பேரவையிடமிருந்து அங்கீகாரம் பெறப்பட்டு அதற்கிணங்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | வைப்பிலிருந்து மேலதிக வருமானத்தை ஈட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2013 முதல் 2015 வரையிலான காலப்பகுதியில் தனியார் நிறுவனத்திற்கு நிலையான சொத்துப் பதிவேட்டைத் தயாரிப்பதற்காக ரூபா 6,247,846 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அது முறையாக நாளதுவரையாக்கப்பட்டிருக்காததுடன் சில கொடுக்கல் வாங்கல்கள் 2021 திசெம்பர் 31 அளவில் உள்ளிடப்பட்டிருக்கவில்லை. மேலும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ள சிக்கல்களை புதுப்பித்து சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் தற்போதுள்ள பௌதீக சொத்துக்களின் பெறுமதி, நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான சொத்துக்களின் பெறுமதி மற்றும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டிலுள்ள சொத்துக்களின் பெறுமதி என்பவற்றிற்கிடையே குறிப்பிடத்தக்களவு வேறுபாடு காணப்பட்டது. எனவே அத்தகைய பதிவேட்டைத் தயாரிப்பதற்காக | இதுவரை, மூன்று துறைகளில் மெய்மையாய்வு பூர்த்தி செய்யப்பட்டு நிதிக் கிளையில் மெய்மையாய்வு நடைபெற்று வருகிறது. | நிலையான சொத்துக்கள் பதிவேட்டை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்ட செலவினம் பயனற்றதாகியிருந்தது. | | |
| (இ) | 2016 ஆம் ஆண்டு முதல் பல்கலைக்கழகத்தின் 15 காணிகளின் உரிமைத்துவத்தை தீர்ப்பதற்காக ரூபா 1,215,000 ஆலோசனைக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அந்தக் காணிகளின் உரிமைத்துவம் 2022 யூலை 25 வரை மாற்றப்பட்டிருக்கவில்லை. | காணிகளின் உரிமைத்துவத்தை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. | காணிகளின் உரிமைத்துவத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட கல்விசார் பதவியணியினரிற்கான நெறிமுறைகள் மற்றும் கல்விப் பொறுப்புக்கூறலின் பிரகாரம் தலைவர், தலைமை பேராசிரியர், பேராசிரியர், சிரேஷ்ட விரிவுரையாளர், விரிவுரையாளர், பயிற்றுவிப்பாளர் தரம் I மற்றும் பயிற்றுவிப்பாளர் தரம் II ஆகியோரால் ஆண்டொன்றிற்கு குறைந்தபட்ச மாணவர் தொடர்பு நேரம் தனிப்பட்ட நேர அட்டவணையில் முறையே 180, 300, 360, 380, 450, 480 மற்றும் 510 மணிநேரங்கள் என பிரதிபலிக்க வேண்டும். கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டில் 6 பீடங்களில் உள்ள 100 கல்விசார் பதவியணியினரிடையே 38,580 மாணவர் தொடர்பு நேரம் ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும், மேற்படி விதிமுறைகளில் 47 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 17,948 மணிநேரம் மாத்திரமே ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், மாணவர் ஆராய்ச்சி அல்லது தொழில்துறை வேலைவாய்ப்பு, மருத்துவப் பணிகள் மற்றும் கல்வி ஒருங்கிணைப்பு ஆகியவற்றின் மேற்பார்வைக்கான பணி விதிமுறை ஒதுக்கீட்டை | பதவியணியினரின் பணிச்சுமை மற்றும் ஆராய்ச்சியில் பங்கேற்று மேற்பார்வை செய்தல் தொடர்பாக செலவிடப்பட்ட மாணவர்களின் தொடர்பு நேரங்கள் ஒப்பிடப்பட வேண்டியதுடன் பணி விதிமுறைகளைக் கணப்பிடும் போது தொடர்புடைய கருத்தியல் நேரங்கள் கருத்தில் கொள்ளப்பட வேண்டியிருந்தது. | மொத்த மாணவர் தொடர்பு நேரம் மற்றும் கல்விசார் பதவியணியினரின் மொத்த பணிச்சுமை ஆகியவற்றை பிரதிபலிக்கும் வகையில் பணி விதிமுறைகளின் அடிப்படையில் வழிகாட்டலொன்றை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிரூபிப்பதற்கு எந்த அறிக்கையும் கணக்காய்விற்கு கிடைக்கப்பெறாததால் மொத்த மாணவர் தொடர்பு நேரம் மற்றும் கல்விசார் பதவியணியினரின் மொத்த பணிச்சுமையை பிரதிபலிக்கும் பணி விதிமுறைகளின் அடிப்படையில் பல்கலைக்கழகம் ஒரு வழிகாட்டலை உருவாக்கியுள்ளது என்பதைக் கண்டறிய முடியவில்லை. | | |
| (ஆ) | பல்கலைக்கழகத்தின் தற்போதைய பாடங்கள் மற்றும் பாடத்திட்டங்கள் தொழில் சந்தை மற்றும் நாட்டின் தேசிய பொருளாதாரத்திற்கு ஏற்றவாறு புதுப்பிக்கப்பட வேண்டும், மேலும் பாடத்திட்டத்தில் தொழில்நுட்ப பாடங்கள் மற்றும் மொழி திறன்கள் ஆகியவை எப்போதும் மாறிவரும் தொழில் சந்தைக்கு ஏற்றவாறு உள்ளடக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், விவசாயம், தொழிநுட்பம் மற்றும் பிரயோக விஞ்ஞானம் போன்ற 03 பீடங்களின் பாடத்திட்டங்கள் ஆரம்பத்திலிருந்து மீளாய்வு செய்யப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | கலை மற்றும் கலாசார பீடம், விஞ்ஞான பீடம் மற்றும் வணிக மற்றும் முகாமைத்துவ பீடம் என்பன தமது பாடத்திட்டத்தை திருத்தியமைத்துள்ளதுடன் ஏனைய பீடங்களும் பாடத்திட்டத்தை திருத்துவதற்கு வருகை தருகின்றன. | பாடத்திட்டத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | வணிக முகாமைத்துவமானிக்கான வெளிவாரி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் மாணவர்களின் வழிகாட்டி புத்தகத்தின் பிரகாரம் பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கான குறைந்தபட்ச கால அளவு 03 கல்வி ஆண்டுகள் ஆக காணப்பட்ட போதிலும் 2016/2017 ஆம் கல்வியாண்டிற்கான வணிக முகாமைத்துவமானி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் ஐந்து வருடங்களாக பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை பூர்த்தி செய்வதில் தாமதம் ஏற்படுவதால் மாணவர்களின் தொழில் மற்றும் வேலை வாய்ப்புக்கள் மோசமாகப் பாதிக்கப்படும். | கொவிட்-19 தொற்றுநோய் நிலைமை காரணமாக தாமதமானது. | பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | வெளிவாரிப் பட்டங்கள் மற்றும் விரிவாக்கல் கற்கைநெறிகளிற்கான | உள்வாரி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கான | கலைமானி பட்டப்படிப்பு |

| | | | |
|---|---|---|---|
| | மையம் மற்றும் கலை மற்றும் கலாச்சார பீடத்தால் 10 ஆண்டுகளிற்கு மேலாக கலைமானி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை மீண்டும் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, மட்டக்களப்பு மாவட்ட பிராந்தியத்தில் உள்ள ஆர்வமுள்ள மாணவர்கள் கடந்த 10 வருடங்களில் பிராந்தியத்தில் வெளிவாரி கலைமானி பட்டப்படிப்பை பூர்த்தி செய்யும் வாய்ப்பை இழந்துள்ளனர். அதேநேரம் அத்தகைய மாணவர்கள் ஏனைய மாவட்டம் அல்லது மாகாணத்தில் அமைந்துள்ள பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை தொடர வேண்டியிருந்தது. மேலும், பல்கலைக்கழகத்தால் 2018 முதல் M.Phil, பட்டம், டிப்ளமோ மற்றும் சான்றிதழ் கற்கைநெறிகள் போன்ற 11 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பாடத்திட்டத்தை மீளாய்வு செய்யும் பணியில் பீடங்கள் ஈடுபட்டு வருகின்றதுடன் அது வெளிவாரிப் பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் பயன்படுத்தப்படும். | நிகழ்ச்சித்திட்டத்தை மீண்டும் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | இறுதி காலநீடிப்பின் பிரகாரம் 2020 மே மாதத்தில் ஆராய்ச்சியை பூர்த்தி செய்வதற்கு பேராசிரியர் ஒருவரிற்கு ஆராய்ச்சி மானியமாக ரூபா 7,500,000 தொகை 2015 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த ஒதுக்கீட்டில் ரூபா 4,500,000 செலவிடப்பட்டிருந்தது, ஆனால் 2022 யூன் 28 வரையிலும் ஆராய்ச்சி பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | மதிப்பாய்வாளர்களின் கருத்துக்களை உள்ளடக்கிய இறுதி பூர்த்திசெய்யப்பட்ட அறிக்கைக்காக காத்திருக்கிறது. | ஆராய்ச்சியை தாமதமின்றி பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய நிதிகள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக பெறப்பட்ட ரூபா 3,482,240 அரசாங்க மானியங்கள் 03 முதல் 05 ஆண்டுகள் வரையான காலமாக பயன்படுத்தப்படாமல் இருந்தன. | நாட்டின் நிலைமை காரணமாக பதவியணி உறுப்பினர்களிடமிருந்து குறைந்த எண்ணிக்கையிலான விண்ணப்பங்களே காணப்பட்டன. | இந்த மானியங்களை உரிய நோக்கங்களுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | உயர்கல்வி விரிவாக்கல் மற்றும் அபிவிருத்தியை துரிதப்படுத்தல் | உட்புறப் பணிகள் பூர்த்தியடைந்து கணனி | பொருட்களை செயற்திறனாக |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்டத்தால் விவசாய பீடம் மற்றும் விஞ்ஞான பீடத்திற்கு மீளாய்வாண்டில் வழங்கப்பட்ட ரூபா 23,046,063 கூட்டுமொத்தமான நூற்று அறுபத்தைந்து தனிப்பட்ட கணனிகள், இருபத்து நான்கு Compact wall mount ஒலிபெருக்கிகள் மற்றும் நான்கு Sound Mixers ஒரு வருடத்திற்கும் மேலாக குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் 01 வருட உத்தரவாதக் காலப்பகுதி கடந்திருந்தது. | மையங்களை நிறுவும் பணி என்பன நடைபெற்று வருகிறது. | பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.4 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளில் தாமதங்கள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முறையான சாத்தியவள ஆய்வு மற்றும் போதிய நிதியுதவியின்றி திருகோணமலை வளாகத்தில் உள்ளக வீதி நிர்மாணத்திற்கான ஒப்பந்தத்தின் கட்டம்-I 2017 மே 02 இல் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்கப்பட்டதுடன் ஒப்பந்த பெறுமதி ரூபா 55,775,000 ஆக காணப்பட்டது. உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தம் 2017 நவம்பர் 01 இல் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் ஒப்பந்தம் 2017 நவம்பரில் கைவிடப்பட்டிருந்தது. பின்னர், ஒப்பந்தம் 2019 திசெம்பர் 03 இல் மீண்டும் தொடங்கப்பட்டிருந்ததுடன் 2022 மார்ச் 25 அளவில் ஒட்டுமொத்த பௌதீக செயன்முன்னேற்றம் 45 சதவீதம் மாத்திரமேயாகும். | நிதி பற்றாக்குறை மற்றும் தொற்றுநோய் நிலைமை காரணமாக நிர்மாணம் கைவிடப்பட்டிருந்ததுடன் தாமதமாகியிருந்தது. | கால எல்லையினுள் நிர்மாணத்தை பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | திருகோணமலை வளாகத்திற்கான பல்நோக்கு கேட்போர் கூடத்திற்கான கட்டிடத் தொகுதியை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் ரூபா 674,467,920 ஒப்பந்தப் பெறுமதியுடன் வழங்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தம் 2020 நவம்பர் 04 இல் பூர்த்தி செய்யப்பட வேணடியிருந்த போதிலும் 2022 மார்ச் 25 இல் உள்ளவாறான பௌதீக செயன்முன்னேற்றம் 08 சதவீதம் மாத்திரமேயாகும். மேலும் ஒன்றரை ஆண்டு காலதாமதத்திற்குப் பின்னர் | 2021 ஆம் ஆண்டின் நடுப்பகுதி வரை நாட்டில் ஏற்பட்ட கொவிட்-19 தொற்றுநோய் நிலைமை காரணமாக வேலையின் முன்னேற்றம் தாமதமாகியிருந்தது. | -மேற்படி- |

நிலவும் உயர் பணவீக்கம் மற்றும் விலை உயர்வு என்பன ஆரம்ப ஒப்பந்த தொகையை மோசமாகப் பாதிக்கும்.

### 3.5 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டில், சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரர் சமர்ப்பித்த தேசிய சாம்பியன்ஷிப் தகைமை சான்றிதழின் அடிப்படையில், குறித்த விண்ணப்பதாரரை உடற்கல்வி பயிற்றுவிப்பாளர் தரம் II/I பதவிக்கு பல்கலைக்கழகம் ஆட்சேர்ப்பு செய்திருந்தது. எனினும் விண்ணப்பதாரர் அவ்வாறானதொரு போட்டியில் கலந்து கொண்டிருக்கவில்லை என்றும் சான்றிதழ் போலியானது என்றும் கிழக்கு மாகாண விளையாட்டு திணைக்களம் உறுதிப்படுத்தியிருந்தது. | சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரர் சமர்ப்பித்த சான்றிதழ் சரிபார்ப்பதற்கு கோரப்பட்டது. | சான்றிதழை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 06 பீடங்கள் 680 செயற்பாடுகளை அமுல்ப்படுத்துவதற்கு திட்டமிட்டிருந்தன. அவற்றில் 329 செயற்பாடுகள் தொடங்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது நிலவும் தொற்றுநோய் நிலைமை காரணமாக பல செயற்பாடுகளை அமுல்ப்படுத்தி பூர்த்திசெய்ய முடியவில்லை. மேலும் அவை 2022 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படலாம். | இலக்குகளை அடைந்துகொள்வதற்கான நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ரூபா 213,000,000 மூலதன மானியங்களில் 41 சதவீதத்திற்கு சமமான ரூபா 86,490,795 தொகை குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக செலவிடப்பட்டிருக்காததுடன் ரூபா 33,500,000 தொகையான இன்னொரு மூலதன மானியம் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிலவும் தொற்றுநோய் நிலைமை காரணமாக கட்டளையிடப்பட்ட பொருட்களைப் பெறுவதில் தாமதம் ஏற்பட்டதன் விளைவாக இது ஏற்பட்டது. | ஒதுக்கீட்டை செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |